
கங்கை நதி ஓரம்
Pax Ravichandra
pax.ravichandra@gmail.com
+94763223960
24-11-2024


கங்கை நதி ஓரம்
BEINGSS
Pax Ravichandra
+94763223960
pax.ravichandra@gmail.com
24-11-2024

கங்கை நதி ஓரம்

அம்மா-என் அம்மா



குடிசையோ நம் கூடு- தாயோ உன்னோடு
வாழும்போது வீடோ திருக்கோயிலான பேறு
அமுதிலும் இனிதாய் உன் உணவு
ஆனந்த சொர்க்கமாய் உன்தன் உறவு

கிணற்றில் குளித்து, குப்பி விளக்கில் படித்து
பாயில் உறங்கிய வாழ்வோ மோட்சம்
நீ பிசைந்த பழஞ்சோறோ தேவாமிர்தம்
உன் அன்போ எமக்குத் தேவகடாட்சம்



நீலக்கடலில் நீந்தி விளையாடும் கயல்களாய்,
கானக்குயில்களாய், வானம்பாடிகளாய்,
ஆடி மகிழும் கலாபமயில்களாய், அன்னை
அன்பில் நிலைத்த வண்ண அஞ்சுகங்கள்

நாளும் வசந்தம், சுவாசத்தில் தாய்மையின்
சுகந்தம், பாடம், படிப்பு, ஆட்டம், பாட்டம்
எளிமையில் கண்ட இன்பம் குடும்பமோ பேரின்பம்
அன்புத் தாயின் உறவில் நாளும் கொண்டாட்டம்

தாய்மையிலும் உழைத்துக் காத்த தந்தையின்
ஆளுமை, தெய்வமே, மாதா, பிதா குருவாகி நின்று
உன்னத மேன்மை, நூற்காத தவத்திற்கு
இறை தந்த வரம், அம்மா என் பேரின்பம்

இளமையில் கைமை பூண்ட அம்மை
எம்மைக் காத்து வளர்த்திட-குருஷேத்திர
பூமியில் குழல் ஊதி, நடனமாடிப், போராட்டமான
வாழ்வை விளையாட்டாக்கிய பெண்மையின் மேன்மை

கல்வாரிப் பாதையான வாழ்வில்-தோளிலே பாரச் சிலுவை,
வசையும், கசையும், வாழ்த்தும் கடந்த பெண்மை,
வீழ்ந்தபோதெல்லாம் எழுந்து நடந்த அம்மை-
இறைவா நான் உன் அடிமை மறவாத தாய்மை

அம்மா சொல்லும்போது நா இனிக்கும்
நெஞ்சம் மகிழ்ந்து பூவாய் மலரும்
வண்ணக் கனவுகள் உதிக்கும், மாலையிட்ட
படத்தை காண விழிகளில் கண்ணீர் துமிக்கும்



துடிக்கும் இதயத்தில் அவளோ தூங்காத நினைவு
படிக்கும் நன்நூல்களில் மங்காத அறிவு, முடி நரைத்து,
உடல் தளர்ந்து, மூப்பு நெருங்கினாலும்-இன்றும்
என்னை ஆட்கொண்ட பேரின்பராஜா உறவு- அம்மா

பிள்ளைகளோ இறை தந்த செல்வம்
அன்பு உண்மை, கல்வி, ஒழுக்கம், எளிமை
அன்னை கற்றுத் தந்த விழுமியம்
என் நெஞ்சமோ அவள் வாழும் ஆலயம்

குறையேதும் இல்லாத குழந்தைகளின் வாழ்வோ பேரின்பம்
வாசமலராய் பாசம் வீசி, வண்ணநிலவாய் வாழ்வில்
உலாவிய தேன்நிலவு, எண்ணிட எல்லாம் வண்ணக்கனவு
இறைவனே எம்மோடு வாழ்ந்த இன்ப உறவு-அம்மா

அன்னையோடு வாழ்ந்த காலம் வசந்தம்,
தாயன்போ சுகந்தம், அவள் ஆட்சியில்
தாய்மையின் மாட்சி, உண்மையின் எழுச்சி
நாளும் பூபாளத்தில் என்தன் பள்ளியெழுச்சி

மண், பொன், பொருள், புகழ் கிடைத்தாலும்
கிடைக்காத சங்கநிதி அம்மா
தாயன்போ வற்றாத கங்கை நதி,
அம்மா நெஞ்சில் நிறைந்த குபேர நிதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-27-10-2024

கங்கை நதி ஓரம்



பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம்

தங்கக் கரைபோட்ட நீலவண்ணச் சேலை கட்டி-வங்கக் கடல்
நோக்கி அன்ன நடை போடும் கங்கை, வானில் மிதந்தாடிச்
செல்லும் வெண்பஞ்சு மேகங்களோ கங்கைக்குத் தங்கை,
கறுத்து மழையாய்ப் பொழிய வெள்ளமாய்ப் பொங்கிடும் மங்கை



ஆள் நடமாற்றமற்ற நதியோரம் அழகிய குடிசை
மூப்பும், பிணியும் வருத்த மரணம் நெருங்கிட-கங்கையில்
மரித்தால் மோட்சம் பார்ப்பன கணவன் நம்பிக்கை
விதவை வாழ்வில் ஏது சுபீட்சம்? கேலிக்கை



வறுமை உறவாக, அழகிய குமரியோ பார்பனத்
தந்தைக்கு கட்டிக் காக்க முடியாத பெருநிதி
தக்க காலத்தில் கன்னிகாதானம் செய்யாவிடில்,
சாதிப்பிரதிஷ்டம் பார்பனர் வகுத்த சமுதாய நீதி

அஞ்சித் தன் அஞ்சுகத்தை தாரமிழந்த மூப்பு,
பிணி வாட்டிட மரணம் நெருங்கிடும் பார்பனக் கிழவனுக்கு
தாரை வார்த்த நெஞ்சிலே தீராத சோகம்,வண்ணக் கனவுகள்
கலைந்திட கன்னி வாழ்வில் காரிருள் சூழ்ந்த பாவம்

இருமனம் ஒட்டாமல் இட்ட முடிச்சோ ஒவ்வாத பந்தம்,
மனம் ஒட்டாத பந்தத்தில் ஏது சுகம், என்ன சொந்தம்?,
மாங்கல்யமும் தூக்குக்கயிறு, மங்கை நெற்றியில் இட்ட
குங்குமமோ மனதைச் சுட்டெரிக்கும் நீறு பூத்த நெருப்பு



கன்னியோ பதினாறும் நிறையாத பருவமங்கை-
காதல் பசியூட்டி வசமாக்கும் ரதியின் தங்கை
இளமை பூத்தாடும் மங்கையோ பச்சை மரம்
வாழ்ந்து களைத்த முதியவனோ பட்ட மரம்



பருவம் பூத்த வண்ணமலர், வசந்தம் காணாமல்
கல்லுக்குச் சாத்திய மலராய் வாடிக்கருகிட
மனதிலே நாளும், பொழுதும் அச்சத்தின் உலா
கணவனைச் சுற்றி யமதூதர்களின் உலா

வாழ்வின் இரு எதிர்த்துருவங்களை இணைத்த
பொல்லாத பந்தம்,-மோட்சம் நாடி கங்கைக்கு
வந்த கணவனோ தேய்பிறை- தேன்நிலவு
காணத்துடித்த கன்னி மனமோ வளர்பிறை

வான்நிலவும், வண்ணமலர்களும்
கண்டு மயங்கும் கன்னி அழகோ வண்ண ஓவியம்,
வசந்தம் பூத்தாடும் காவியம், கணவனோ
வண்ணமிழந்த ஓவியம், வடிவம் சிதைந்த சிற்பம்

ஓயாத அலைகளாய் பூ மனதில் பெருஞ்சோகம்
ஓடும் கங்கையில் கடலைச் சேரும் தாகம்
பெண்ணாய் பிறந்தாலே சோதனை-புரியாத
குற்றத்திற்கு ஏனிந்தக் கொடிய தண்டனை



மையளாவிய விழிகள் மையிழந்து சோர, நெய்
தடாவிய மதுமலர்க்கூந்தல் வாட, அங்கை மலரும்,
அடி தளிருமான பூங்கொடி, பற்றிப் படர கொழுகொம்பாய்
கருகிடும் முட்செடி, விதி வகுத்த சதியோ?

நெஞ்சில் நிலைத்த சோகம், கஞ்சிக்
கலத்திலும் பொங்க, அஞ்சித் தனிமையில்
கன்னியின் வாழ்வு, கணவன் மரித்தால்
மங்கையின் வாழ்வோ அமாவாசையிரவு



இடைதொட்டு நடையோடு சதிராடும் மலர்க் கூந்தல் மழித்து
பொட்டும், பூவும், கழித்து, வளையல்கள் உடைத்து
வாழ்நாள் எல்லாம் வெண்ணாடை உடுத்திடும் வாழ்வு
வண்ணம் காணாத வாழ்வில் நாளும் சாவு

நடைப்பிணமான நங்கை, வண்ணக் கனவுகளை
அழித்து, வாழ்வைப் பறித்த வறுமை, பார்ப்பன
நீதியோ சிறுமை, மூப்பு, பிணி வருத்தும் மனிதனுக்கு
மாலையிட்ட மங்கையோ புழுதியில் விழுந்த பூமாலை



வெறித்த விழிகள் வானில் நிலைக்க-
சாதிய நீதியால் வேதனை பெருக-பெண்ணாய்
பிறப்பதே சாபம், பிறப்பு, இறப்புத் துக்கம்
இறப்பில் வரும் நிம்மதியோ ஆனந்த சொர்க்கம்

இரவும், பகலும் இதயம் சோகத்தில் நிலைக்க
கனவிலும், நனவிலும் மரணம் அரக்கனாய் அச்சுறுத்த
கலங்கிய கன்னி, உறவாடிக் கவலைபோக்க தாய்
மடியில்லை, ஏழை வாழ்வோ கேள்விக்குறியான நிலை?

எண்ணெய்யும் திரியும் கொண்டு-இரவில்
புகை கக்கி எரியும் குப்பி விளக்கு
எரியும் மனத்தோடு அச்சம் வாட்ட பகலிலும்,
இரவிலும் ஒளிரும் மங்கையோ குத்துவிளக்கு

இருள் பூக்கும் இரவில்
எழில் காட்டும் வண்ணநிலவு
பருவம் பூத்த மனதில்
கருகிப்போன வண்ணக்கனவு



அறமான இல்லறமோ பெருவரம்-
தாம்பத்திய உறவோ யாத்திட அருந்தவம்
அன்பினால் இன்புறும் உறவோ திருமணம்
வியாபாரமான உறவில் நாறும் காசு பணம்

வெதும்பிய மனதில் விரக்தி
நெஞ்சுக்குள் எரியும் நரகத் தீ-முல்லைக்கு
ஈந்த கறையான் அரித்த தேர்- கிள்ளையை
கூண்டிலடைத்து சிறகை முறித்த ஊர்



காமனை வெல்ல இல்லறமோ இயற்கை வகுத்த நியதி,
கட்டாயத் திருமணமோ சாதியச் சடங்கான நீதி
நெஞ்சுக்குள் விழிக்கும் இளமைக் கனவு, மாயை,
எல்லாம் மாயை சொல்லாமல் தவிக்கும் கன்னி மனது

அதிகாலையில் நீராட விளைந்த மங்கை
வானில் தூறல் மழை, வலுத்த மழையால்
வெள்ளம் பெருகி அழகியை அள்ளிச் செல்ல
சுயநினைவின்றி மிதந்த கிள்ளை



கங்கையில் மிதந்து வந்த அழகோ பங்கயம்
நீந்திக் குதித்து உயிர் காத்த மனதில்
பேரானந்தம், கண்ட அழகில் பரவசம்
நெஞ்சில் பூத்த காதலில் மதுரசம்

விழித்தவள் விழி காண ஓர் குடிசை
சூடேறக் கட்டிலின் கீழே காங்கை,
தலை துவட்டி, கை கால்களைத் தேய்த்து
நோக்கிய காளை முகத்திலே தீராத கவலை



வியப்போடும், பதட்டத்தோடும் விழித்தவள் எழுந்து
உட்காரத் தடுமாறிட வருத்தும் சுரம், சற்று
ஓய்வெடுங்கள், உடல் நலமாகும், சொன்னவன்
வார்த்தையில் இதுவரை கேளாத வாஞ்சை

எழுந்து நடந்தவள் தடுமாறிட, நூலிடை
பற்றி தாங்கிப் பிடித்த கரங்கள், இதயத்தில்
இனம் புரியாத இன்பம், கண்ணோடு கண்நோக்க
மதிவதனத்தில் முதல் முறையாய் பூத்த நாணம்

நெற்றியில் கைவைத்தவன் சுரம் வருத்தும் தொல்லை
காஷாயம் வைத்துள்ளேன் பருகுங்கள், பரிவோடு
பருகிடத் தந்து கனிவோடு நோக்கிய விழிகளில் அன்பு
நங்கை மனத்திலே நாணத்தின் அரும்பு

விழகளோ கள்வடியும் பூக்கள், கிள்ளை மொழிகளில்
பாக்கள், வாசத்தில் பரிமளம், நாணத்தில் நறுமணம்
கங்கை நதி தந்த அழகோ தேனிலும் இனிமை
பாற்கடலில் பிறந்த திருமகளாய் பெண்மை





மலரில் தேன் இருக்கும், மாங்கனியில் திகட்டாத
சுவையிருக்கும், திராட்சையில் மயக்கும் மது இருக்கும்
கங்கை தந்த தேவதையோ காண மயங்கும் பேரழகு
காளையை கவிஞனாய் மாற்றிய தேன்நிலவு

தொட்டுத் தூக்கி வந்தீர்களா? மனதில் வெட்கத்தோடு
வினவிய கேள்வியில் இதுவரை புரியாத ஆனந்தம்
ஆண்மகனோடு தனித்திருக்கையில் விழித்த
நாலுவகைக் குணம், கணவனைக் காணும் ஆதங்கம்

வெள்ளம் புரண்டோடுகிறது, கங்கை திடீரெனப்
பெருக்கெடுப்பது ஒன்றும் புதிதல்ல
அஞ்சவேண்டாம், வெள்ளம் வடிந்திடச் செல்லலாம்
மொழிகளில் கனிவு, விழிகளில் பரிவு

மாலையில் இளைஞன் துணைவரத், தன் குடிலை
நோக்கி நடந்தவள் கண்டதோ அவலம், குடில் எங்கும்
வெள்ளம், கரை புரண்ட வெள்ளம், கட்டிலோடு
அள்ளிச் சென்ற கணவனுக்கு கிட்டியதோ மோட்சம்





விம்மினாள், அழுதாள், கொழுகொம்பின்றி
சோகப்புயலில் சரிந்த பூங்கொடி மயங்கி விழுந்தாள்
மணவாழ்வே சாபம், மரித்தும் கணவனால்
கிடைத்த விதவைக் கோலமோ எரிநரகம்

சரிந்தவளை பற்றிப் பிடித்தவனுக்கு
மங்கையின் சரித்திரம் விளங்கிட-மனதிலே
தீராத வேதனை, மங்கையர் வாழ்வோ
நெய் வார்த்த தீயில் நித்தம் நீராடும் சோதனை

விழித்தவள் வெறித்த நோக்க, களிப்போடு சிரித்தவன்
கலங்கவேண்டாம், காலம் உள்ளவரை காப்பேன்
சாதியம் கடந்த சத்திய யாத்திரை நம் வாழ்வு,
காதலே நம் இருவருக்கும் கீதை, புதிய பாதை

உள்ளம் விம்ம, ஊழ் அறுத்த வார்த்தையால்
பூ விழிகளில் கண்ணீர் ததும்ப, தன்னை மறந்த மங்கை,
தாரமிழந்தவளுக்கு வாழ்வளிக்க வள்ளலாய்
தன்னை அளித்தவனைத் தேவனாய்ப் போற்றிய நங்கை

கணவனுக்கு கிட்டியதோ மோட்சம், நங்கைக்கு
கிட்டியதோ தேவகடாட்சம், ஊர் கடந்து,
கங்கை துறந்து கண்காணாத இடத்தில் புது வாழ்வு,
பூவும், பொட்டும் பூத்தாட வசந்த உற்சவமாய் வாழ்வு



அறுந்தது மாங்கல்ய பந்தம், அழிந்தது குங்குமச்
சொந்தம், தீர்ந்தது, தீராதென்ற கடன்,
வெள்த்தால் கரைசேர்ந்த உள்ளங்கள் நெஞ்சில்
புதுவிடியல் பூத்திட, பூபாளம் பாடிய கங்கை



மோட்சம் போனதோ முதிய சொந்தம்
தேவகடாட்ச்சம் எனக் கிட்டியதோ புதிய பந்தம்
குங்குமம் இருந்தும் மங்கலமில்லாத வாழ்வு
குங்குமம் அழியச் சுமங்கலியான பேறு

பூத்த வாசமலராய் மனம் சிரிக்க, மங்கையின்
நெஞ்சில் பெருக்கெடுத்த காதல் வெள்ளம்
கணவன் மனைவியரை அள்ளிச் சென்ற கங்கை
வெள்ளம், பார்ப்பன மனங்களில் சந்தோஷம்

கார் கண்ட தோகையென மகிழ்ந்தாள், கண்பெற்ற
அந்தகியாய்ச் சிரித்தாள், கரைந்துருகிப் பாடிய கானத்திற்கு-
பதில் தந்த ஜோடிக்குயிலைக் கண்டாள், நீர் பெற்றுயர்ந்த
நிறைபுலமாய் மங்கை மனம் நிறைந்தாள்

காதல் ஒன்றும் பாவமல்ல-கைமை
மங்கையருக்கு வாழ்நாள் சிறையுமல்ல
அபலையின் வாழ்வில் ஏற்றிய தீபம்
ஆண்டவன் மகிழ்ந்து கொண்டாடிய உற்சவம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-26-10-2024

சாதிப்பிரதஷ்டம்** (Caste Ostracism) என்பது சமூகத்தில் தங்கள் சாதியைச் சேர்ந்த ஒருவர் அல்லது குடும்பம் சமூக வழக்கங்கள் அல்லது நெறிமுறைகளை மீறியபோது அவர்களை சமூகத்திலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விலக்குவது. இது இந்தியாவில் பல சாதிகளிலும் குறிப்பாக பிராமணர்கள் உள்ளிட்ட உயர்ந்த சாதிகளில் சமய சமூக அல்லது பாரம்பரிய விதிமுறைகளைத் தவிர்க்கும் நபர்களுக்கு எதிராக வரலாற்றிலிருந்து பின்பற்றப்பட்ட ஒரு சமூக தண்டனையாகும்.

சாதிப்பிரதஷ்ட சட்டம்** என்பது இந்திய சட்டத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்படவில்லை ஏனெனில் இந்திய அரசியல் மற்றும் சட்டவியல் அமைப்பு சாதி அடிப்படையில் பின்பற்றப்படும் எந்தவொரு சமூக புறக்கணிப்பையும் எதிர்க்கிறது. 1949ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பிறகு சாதி அடிப்படையிலான பாகுபாடு புறக்கணிப்புஇ அல்லது சாதிவெறுப்பு தாமதமாக தடுக்கப்பட்டது. இதற்கான முக்கியமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள்:

1. இந்திய அரசியலமைப்பு (Constitution of India)

மாநில அளவிலான சட்டங்கள்** மற்றும் இந்திய அரசியலமைப்பின் **கட்டுரை 15** மற்றும் **கட்டுரை 17** ஆகியவை சாதி அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடுக்கின்றன. இந்த சட்டங்கள் சாதி அடிப்படையிலான புறக்கணிப்பு அல்லது முறைமீறல்களை சட்டவிரோதமாகக் குறிக்கின்றன.

அந்தஸ்து நீக்கல் சட்டம் (Abolition of Untouchability Act)**, 1955: சாதி அடிப்படையில் புறக்கணிப்பு மற்றும் பாகுபாடு செய்யும் முறைகளை தடுக்கிறது.

2. **பின்பற்றப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடிகளுக்கு உரிமைச் சட்டம் (Scheduled Castes and Tribes (Prevention of Atrocities) Act), 1989**:

- இந்த சட்டம் சாதியை அடிப்படையாகக் கொண்டு சமூக அடக்குமுறைகளைத் தடுக்கிறது. சாதி அடிப்படையில் புறக்கணிப்பை விலக்குவதற்கான சட்ட நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

3. **சமூக முன்னேற்றம்**:

- தற்போது இந்தியாவில் குறிப்பாக நகரங்களில் சாதி அடிப்படையிலான புறக்கணிப்பு மற்றும் சாதிப்பிரதஷ்டம் அதிக அளவில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. மாறாகஇ அனைவருக்கும் சம உரிமை மற்றும் சமாதான வாழ்க்கையை ஆதரிக்கும் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது.

சாதிப்பிரதஷ்டத்தின் விளைவுகள்:

- சமூகத்தில் மரியாதை இழப்பு
- குடும்பத்திடம் உறவினர் மற்றும் நண்பர்கள் தொடர்பு கொள்ளாமல் இருத்தல்
- சமய மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்க அனுமதி மறுக்கப்படுதல்

இவை அனைத்தும் சமூகம் மற்றும் நெறிமுறைகளை மீறியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பழைய முறையாக இருந்தாலும் இன்றைய சட்டங்களில் சாதிப்பிரதஷ்டம் கடுமையாகக் கண்டிக்கப்படுகிறது.

பிராமணர் அல்லது வேறு சாதியினரின் சமூக மரபுகளில் மகளின் திருமணத்தை தகுந்த காலத்தில் செய்யாதால் சமுதாய நெறிமுறைகளை மீறுகிறார்கள் என்ற எண்ணம் இருக்கலாம். சில சமுதாயங்களில் இத்தகைய முடிவுகள் சமுதாய வறுமைகள் காய்ச்சல்கள் அல்லது "சாதிப் புறக்கணிப்பு" போன்றவற்றை ஏற்படுத்தலாம்.அவரது மகளின் திருமணம் "காலத்திற்கு" முன்னடையாதது எவ்விதத்தில் சிக்கல்களை உருவாக்கும் என்பது சமுதாயத்தின் பழக்கவழக்கங்களினும் குடும்பத்தின் நிலைமை மற்றும் நம்பிக்கைகளினும் பெரிதும் அமையும். இதற்குப் பிற்பாட்டில்:

1. சமூக அழுத்தம்:**
 - பிராமணர்களின் சமுதாயத்தில்ஓ குறிப்பிட்ட வயதிற்குள் மகளின் திருமணம் நடைபெறாதது ஒரு சிறு புறக்கணிப்பாகக் கருதப்படலாம். இது பெற்றோர்கள் மீது நெருக்கடியை ஏற்படுத்தும்.

2. சமூதாய மரபுகள்:** - சில சமுதாயங்களில் திருமணத்தை தகுந்த காலத்தில் செய்யாமல் போனால்ஓ பெற்றோர்கள் சமூகத்தில் மரியாதை இழக்கலாம் அல்லது அவமானம் அடையலாம். இது பண்டைய நம்பிக்கைகளால் சார்ந்தது.

3. ஆன்மீக நம்பிக்கைகள்:**

 - சில சமயங்களில்ஓ குறிப்பிட்ட ஆன்மீக நம்பிக்கைகள் அல்லது ஜோதிட நெறிகள் திருமணத்தை தாமதமாக செய்வது குடும்பத்தில் உள்ள நல்ல அல்லது கெட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என நம்பிக்கையுண்டு.
எவ்வாறாயினும் சமுதாய நெறிமுறைகள் தற்போது மாறிவருகின்றன குறிப்பாக நவீன கல்வியும் வேலை வாய்ப்புகளும் பெற்ற பெண்களின் திருமணம் பிற்படுத்தப்படும் போது பெரும்பாலான சமூகங்களில் இப்படியான தண்டனைகள் அல்லது புறக்கணிப்புகள் குறைந்து வருகின்றன.

காதல்

கண்டு மலர்ந்த குவளை விழிகளில் காதலின் அலை
தேனாய் உண்டு மகிழ்ந்த உள்ளத்தில் பாயும் வைகையோ
உவகை, கன்னியோ பிரம்மன் எழுதிய அழகின் மாறாத கீதை
காளையர் உள்ளத்தில் காதலோ வற்றாத பொய்கை



விழிகளோ கயல்கள், செவ்விதழ்களில்
செந்தேன் சுனைகள், பொன்மேனியில்
பருவத்தின் எழில்கள், மலர்மேனியில்
சுவாசத்தை அள்ளும் மாறாத நறுமணங்கள்



நாணமுடைய கோலமும், நகை தவழும் முகமும்
எழில் சொல்லும் கோலமயிலின் சாயலும்
என் நெஞ்சைக் கொள்ளை கொள்ள
காதலான மனது, கவிபாடும் முப்பொழுது

கண்ட மனதில் பூத்த புது வசந்தம்- கன்னியின்
முத்துப்புன்னகையோ காதலை அள்ளித் தெளித்த
ஆனந்த தீர்த்தம், மனதிலோ குயிலின் கானம்,
துள்ளும் இதயத்திலோ கலாபத்தின் நடனம்

ஈர இதழ்களில் குறுநகை பூக்க
ஒரு விழியாள் காதல் நோய் தந்து
மறுவிழியாள் நோய் தணித்த மங்கை
நான் மணக்கப் பூவான நறுமண கங்கை



முத்துச்சரமோ பற்கள், முல்லைச்சரமாய்
செங்கனிவாய்ச் சொற்கள்,
கத்தும் கடலாய் மனது, காதல் நிலவு
உலவும் வானாய் என்தன் பொழுது

அண்ணலும் நோக்க, கன்னியும் நோக்க
இதயச் சங்கமத்தில் பூத்த வசந்தமாய்க் காதல்,
நினைவெல்லாம் தேனாக, நெஞ்சமெல்லாம் அமுதாக,
மணவாழ்வில் நிலைத்த மங்கலமாய்க் குங்குமம்

மங்காத காதல் நிலவாய் மங்கை-வாழ்வில்
காதலோ வற்றாத தேன்கங்கை, மஞ்சளும்,
குங்குமமும், மலர்களுமான வாழ்வில் மங்கலம்
நாளும் நெஞ்சில் காதலின் குதுாகலம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-20-11-2024

காவியப் பெண்கள்



சீதைக்கு நேர்ந்த சிறுமை,
ராஜா ராமன் இழைத்த கொடுமை,
காட்டுக்குப் போன தாய்மை
கணவனை நிராகரித்த பெண்மை



சூதாடி தர்மனின் பகடை ஆட்டத்தில்
பகடைப் பொருளாகி கண்ணீர் சிந்திடும் அபலையாய்
மகாராணி திரௌபதி, குந்தி புத்திரன் இழைத்த
சிறுமை, துச்சாதனனைச் சாடிய பெண்மை

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஸ்ரீராமன்- தாரத்திற்கும்,
காமபோகத்திற்கும் ஏது எண்ணிக்கை என்ற தசரதன்,
புராணங்களில் தேவர்,முனிவர் யாத்த நாறும்
காம வேள்வி, அப்பாவி பெண்களோ ஆகுதி



ஒருவனுக்கு மாலையிட்டு ஐவருக்கு
மஞ்சம் விரித்த பாஞ்சாலி, நால்வருக்கு
குழந்தை ஈன்ற நங்கையாய் குந்தி

வியாசனால் திருதராட்டினன், பாண்டுவை ஈன்ற
அம்பிகை, அம்பாலிகா, மகா பாரதம் எங்கும்
நியோகம், வர்ணக்கலப்போ பார்பன யோகம்



காவியத்திலும் பெண்மையின் நிலை கொடிது
கற்பு, மானம் தேவருக்கும், முனிவருக்கும்
வேண்டாத மருந்து, மண்டோதரியும், மாதவியும்,
மணிமேகலையும் பெண்மைக்கே சிறப்பு



ஊர்வசி வாழ்வை நரகாக்கியவனோ முனி
விசுவாமித்திரன், சாகுந்தலையின் வாழ்வை
கண்ணீர்க் காடாக்கியவனோ முனி துர்வாசன்

பீஷ்மன் கொடுமையால் வாழ்விழந்த அம்பையோ
சிகண்டி, இந்திரன், முனிவன் சிறுமையால்
கல்லான பெண்மையாய் அகல்யா

அந்தகன் திருதராட்டினனுக்கு மாலையிட
இளவரசி காந்தாரியைச் சிறையெடுத்த பீஷ்மன்
அந்தகனுக்கு வாழ்க்கைப்பட்டு,
அந்தகிபோல் வாழ்ந்த உத்தமி காந்தாரி

கட்டியவளைக் நள்ளிரவில் காட்டில் கைவிட்ட நளனோ சூதாடி,
கண்ணகியைப் பிரிந்து மாதவியின் சலங்கையைத் தொழுத
கோவலனோ பேடி, நெய் வார்த்த தீயில் நீராடி வந்தவளை
ஏற்ற கணவன், நீதிக்காய் மதுரை எரித்தவளாய் மனைவி




நளாயினி வாழ்வை நரகாக்கிய
மௌத்தகல்யரிஷி- கணவன்
காமம் தணிக்க ரோகி கணவனை
கூடையில் சுமந்த அரசகுமாரி

தன்னைத் தோற்றபின் தாரத்தை தோற்ற
பகடையாட்டம், பீஷ்மனுக்கும் மனுஸ்மிருதி
புரியாத சூதாட்டம், விதுரனோ நீதிமான்
சகுனியோ பகடை ஆட்டத்தில் பலவான்

தாரத்தைப் பகடைப் பொருளாக்கிய தர்மனின்
அரக்க சிந்தை, பெண்மையை அம்மணமாய்க் காண
துகிலுரிந்த கொடுமை, கர்ப்பிணியை வனமேகப்
பணித்த ராஜாராமனின் சிறுமை



பாஞ்சாலிக்கு நேர்ந்த கொடுமைக்காய் போர்க்கொடி
பிடித்து, கணவன் துரியோதனன் உறவைத் துறந்த
பெண்ணியப் போராளி பானுமதி, மாண்ட கணவனுக்காய்
வாதாடி உடன் கட்டை ஏறிட சிவனார் புகழ்ந்த உத்தமி



வனமேகப் பணித்தவனோ அவதார புருஷன்
மனைவியைச் சூதாடித் தொலைத்தவனோ தர்மவான்
மாற்றான் மனைவியை அம்மணமாய் காணத் துடித்தவனோ
அரக்கன், அந்தகனோடு அந்தகனாய் அவையிருந்த பீஷ்மன்

கண்களில் கனல் எடுத்து-சூதாடிக்
கணவனை எரிக்காத மங்கை திரௌபதி,
எரியும் தணலில் நடந்து இராவணன்
கற்பை நிரூபித்த நங்கை சீதை

கள்வனயாய் மாண்டவனோ கட்டியவளை விட்டு
ஆடல் நங்கை மாதவியை கூடிய காமுகன்
நீதிக்காய் நெருப்பெடுத்து மதுரைக்கு
தீ மூட்டிய கண்ணகியோ மனைவி

நொருங்கிய சிலம்பு உண்மையைச் சொல்ல
மங்கையின் சீற்றம் மன்னன் நீதியைப் பழிக்க
நொந்த மனம் அநீதத் தீர்ப்பிற்காய் வருந்தி மடிந்திட
மன்னவனோடு உடன் மரித்த மகாராணி

கள்வன் யானே என கோல் கைநெகிழ, குடை சாய,
முடி சரிய மனம் நொந்து மடிந்த மன்னவன் நீதிமான்
துணை மடிந்திட, வாழாத அன்றிலாய் உடன் மடிந்த
மகாராணி கோப்பெருந்தேவியோ, பத்தினி கற்புக்கரசி

மன்னனும், மகாராணியும் மடிந்தும்
தீராத கோபம், நங்கை மதுரையை
எரித்தது மாறாத பாவம், கண்ணகி
பத்தினி என்பதில் என்ன நியாயம்



மாவீரர் ஐவரை மணந்தும் -கண்ணனை
கதறியழைத்து பெண்மையைக் காத்த மங்கை
கணவன் ராஜா ராமன் என்றாலும்-வேண்டாமென்று
மணமுறிவை நாடிய புரட்சிப் பெண்ணாய்ச் சீதை


சீதையும், பாஞ்சாலியும் சாதிக்காத சாதனை
வால்மிகியும், வியாசனும் சிந்திக்காத போதனை
கவி இளங்கோ கூறும் நீதிக்கான போதனை
கண்ணகி மதுரையை எரித்த சாதனை



மாயப் பொன்மானைத் தேடியவனும் புருஷன்
சூதாடியாய் மனைவியைத் தோற்றவனும் தருமவான்
மதுரையை எரித்ததோ அநீதி- மாதரை
அம்மன்களாய் வழிபடுவதோ மனுநீதி

சிலம்பொலிக்க நடந்த பங்கயப் பாதங்கள் நொந்திட
மதுரை எரிந்ததென்ன? சலங்கை ஒலிக்க ஆடிய
பூம்பாதங்கள் வாழ்வை நொந்து, பெருமான் புத்தர்
காட்டிய வழியில் அமைதியைத் தேடி நடந்ததென்ன?

கண் பார்த்து நெஞ்செழுதிய காதலும் பொய்யாகிட
கானகத்தே, மண் பார்த்து மனம் நொந்த கர்ப்பிணி சீதை,
மனம் கசந்து, மாலையிட்ட மணாளனை ஒதுக்கி,
தாய் வீடு போன லவ, குசனுக்குத் தாயான அம்மை,



ஐவரை மணந்தும், கௌரவரை அழித்தும், இறுதியில்
அரியணை அமர்ந்தும் பிள்ளைகளை இழந்த
பாஞ்சாலி மனதில் வெறுமை, கூந்தலில் குருதிவாடை,
நெஞ்சில் நிலைத்த சோகமோ தீராத பீடை,

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை- சீதையும், பாஞ்சாலியும்
அறிந்தும் அறியாத மந்திரமோ? இல்லை
வள்ளுவன் வாசுகிக்கு வரமாய்க் கிடைத்த சுந்தரமோ?

கீதையும் சொல்லாத வேதம்
பெருமான் வள்ளுவன் சொல்லிடும் கீதம்
அறம், பொருள், இன்பம் நிலைத்தால்
அடைவதோ வீடு, வாழ்வோ நம்மோடு

ஒவ்வொரு பெண்ணிற்கும் தனித்த அழகுண்டு
பெண்ணைப் பெண்ணோடு ஒப்பிடல் தவறு
அழகைக் காண அறிவு கடந்த இதயம் வேண்டும்
அழகைப் போற்ற அபூர்வ இரசனை வேண்டும்





தாய்மையின் வடிவம் பெண்மை-தெய்வமே
தாயிடம் தரிசனமாக்கிடும் மேன்மை,
தாயிற் சிறந்த கோயில் இல்லை
அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை

உலகோ ஒரு சத்திரம்,
வாழ்க்கை ஒரு குருஷேத்திரம், பாண்டவர்
கௌரவராய் வந்து வாழ்ந்து போகும் வாழ்வு
தன்னை அறிந்தவனுக்கு ஏது சாவு?

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க எல்லோரும் நலம் வாழ்க
Pax Ravichandra-23-11-2024

மலர்களிலே அவள் மல்லிகை

- -



மங்கை முகமோ பங்கயம்-அழகு
ஜொலிக்கும் அங்கமோ தங்கம்
மலர்மேனியிலே நறுமணம்-கன்னி
மனமோ காதல் மணம் வீசும் பரிமளம்

திங்களாய் மங்கை, மிதிலையின்
மைதிலியாய் நங்கை, சூடிக் கொடுத்த
கோதையோ மல்லிகை, காதல்
வரம் தரும் கற்பகதருவாய் சீதை



வில்லை அணிந்த கிள்ளை, என்னை
வியப்பில் ஆழ்த்திய அழகோ வாசமுல்லை
என்னை வீழத்திய விழிகளோ வேல்கள்
இதயம் எழுதிய காதலோ இன்பத் தொல்லை

தூக்கம் துறந்து, பசியும் மறந்து
கவிஞனான உள்ளம், கனவும்,
நனவும் அவளாக, காதல் சிந்து பாடும்
நெஞ்சிலே அமுத வெள்ளம்

பூவிழியால் காதல் நோய் தந்து-கனிமொழியாள்
காதல் நோய் தணிக்கும் தேவதை
முத்துச் சரமாய்ப் புன்னகை
முல்லை மொட்டுக்களாய் பல்வரிசை



கானத்தால் மகிழ்ந்து கலாப மயிலாய்
ஆடிய மங்கை, நாணத்தால் சிவந்து
நான் சூட தன்னைத் தந்த கோதை
என்னை அள்ளிச் சென்ற காதல் கங்கை

மாதமோ மார்கழி, மங்கையோ தேன்கனி
கண்ட நெஞ்சுக்குள் ஒலிக்கும்
காதற்கோயிலின் ஆலயமணி
என் நெஞ்சுக்குள் என்றும் நீதானடி

விழிகளோ குமுதம், இதழ்களோ அமுதம்
பங்கயப் பாதம், நடையிலே பரதம், மனதிலே
காதல் விரதம்-கன்னியோ தேவப் பிரசாதம்
காதல் வாழ்வோ வரப்பிரசாதம்

மொழியில் சுகந்தம், மோகனமோ
புது வசந்தம், நெஞ்சிலே ஆனந்தம்
நினைவெல்லாம் காதலின் கீதம்
இரு மனம் கலந்த உறவோ இனிய பந்தம்



கண் பார்த்து நெஞ்செழுதிய அழகோ கவிதை
இதயம் சுவைக்க மங்கையோ தேன்வதை
காதல் வானில் உலா வரும் தேன் நிலா
காவியமான வாழ்வில் நாளும் இன்ப உலா



நீல நயனங்களில் காதலின் நர்த்தனம்
நீள் கூந்தலில் என்னைச் சூடும் கீர்த்தனம்
மையளாவிய விழிகளில் மையல்-என் நெஞ்சைக்
கொள்ளை கொண்ட அழகோ தையல்

வாரிய கூந்தலில் என்னை
வாச மல்லிகையாய் சூடிய கிள்ளை,
மல்லிகை என்தன் மன்னன் மயங்கும்
பொன்னான மலரல்வோ பாடிய பெண் பிள்ளை

காதலான உள்ளம் கவிபாட, கன்னி மனமோ கலாபமயிலாய்
கூத்தாட, கத்தும் கடல் ஏழும் கைகொட்டி ஆரவாரிக்க,
என் நெஞ்சைக் கொத்திய காதல் மரங்கொத்தி,
கிள்ளை மொழியால் காதல் சொன்ன பஞ்சவர்ணக்கிளி



எண்ணத்தில் வண்ணக்கோலங்கள்
இதயத்தில் ஆனந்த ராகங்கள்-கண்டு
மகிழ்ந்து காதலான இன்பம் இனிக்கும்
திருமண பந்தத்தில் மாறாத பேரின்பம்

தவமின்றிக் கிடைத்த வரம்-என்னை
வாட்டும் இன்பமோ காதல் சுரம்
இதயம் இசைக்கும் நாதஸ்வரம்-ஏழு
சுரங்களுக்குள் அடங்காத பேரின்ப ராகம்

வளர் பிறையாய் வளர்ந்த காதல்
முழு மதியாய் ஒளி வீச, நாளெல்லாம்
வசந்தம், இரவெல்லாம் பௌர்ணமியின்
இன்பம், சுகந்தமான வாழ்வோ சொர்க்கம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-10-2024

புது வசந்தம்

திங்கள் முகத்தில் சோபனம்
கொவ்வைச் செவ்வாயிலோ திகட்டாத அமுதம்
கனிமொழிகளோ தேவகானம்- கன்னியோ
பிரம்மன் தீட்டிய வண்ண ஓவியம்





நெஞ்சம் கவி பாட, நினைவில் காதல்
அலைமோத-பண்ணும் பரதமுமாய்க் காதல்
பாடி, ஆடும் வாழ்வில் ஊடல்,
நாளும் அன்புத் திருவிளையாடல்

கானம் பாடிய காளை, ஜோடிக்
குயிலாய் இணைந்து பாடிய கோதை,
வானம்பாடிகளான காதல் ஜோடி
காதல் வானில் பறந்த இன்பமோ கோடி

நாம் இருவரல்ல ஒருவர்
என்னுள் நீ, உன்னுள் நான்
என்னும் பாவம், மனதில் இருப்பது
நானல்ல நீயே என்னும் ராகம்

தவமாய் யாத்தும் வரமின்றிப் போன காதல்
எட்டாத நிலவாய் மாறிய திருமணம்
காலவெள்ளத்தில் பிரிந்த உறவோ மனதில் நறுமணம்
வாழ்வில் நிலைத்த கசப்பான நிகழ்வோ மாறாத்துயரம்



அவள்



மாலையிட்ட மணவாழ்வு மணமிழந்து வாட
மனைவியை நாளும் அடித்து துன்புறுத்தும்
மணாளன் குடிகாரனாய் நாற- காயமாகிக் கசந்த
மனதில், வாழ்வோ மாயம் என்ற ஏக்கம்

மனைவியோ உயர் அதிகாரி, மணளானோ
அரச ஊழியன், தாழ்வுமனப்பான்மை
ஆட்டுவிக்க- நடுவு நிலை இழந்த மணளான்
காதல் தராசு, ஆடவன் மனசோ தரிசு

நாளும் போதை, மனைவி, மக்களுக்கு
ஓயாத வாதை, வேலை பறிபோயிட
பேதையின் வாழ்வில் நாளும் துயரம்
கோழையோ குடியில் நிலைத்த அவலம்

பன்னீர் தெளித்து, அட்சதை தூவி, மாங்கல்யம் சூடி,
குங்குமம் தரித்த மங்கையின் மணவாழ்வு
கண்ணீர்க் கங்கையானது, ஆசை, மோகம் கழிந்து,
போதையில் நிலைத்திட, இன்பம் கானல் நீரானது



அவன்

வசந்தமான வாழ்வு எரிநரகானது
புன்னகை மறந்து கண்ணீர் நிலைக்க- வண்ண
ஓவியம் வடிவிழந்தது- குங்குமம் தந்தவன்
குடியால் தள்ளாட, மங்கலம் கேள்விக்குறியானது

அயராது உழைக்கும் பெண்மை, அன்பான
இரு பிள்ளைகளை ஈன்ற தாய்மை,
குடிகாரக் கணவனோ நஞ்சருந்தி மரித்திட,
கைம்மை வாழ்வில் தென்றலாய் வீசிடும் அமைதி



மாலை சூடிய மங்கையோடு மேற்குலகில் வாழ்வு,
குழந்தை மூன்று ஈன்று இன்புற்ற வாழ்வில் வசந்தம்
குடும்பத்திற்காக தன்னை ஆகுதியாக்கிய ஓயாத
உழைப்போ அன்புக் கணவனுக்கு வேள்வியான இன்பம்

பாரவண்டிச் சாரதி, ஆயிரம் மைல்கள் சென்று
வீடு திரும்பிட பல நாட்களாகும், உழைத்து
காத்த குடும்பம் உடைந்து சிதறிட, நண்பனுக்கு
மஞ்சம் விரித்த மனைவி, காமக்கிழத்தி



நண்பனாய் வந்தவன் நாயகனாய் மஞ்சம் பகிர,
சடுதியாய் வீடு வந்த கணவனுக்கு அதிர்ச்சி,
மன்னித்தும் தொடர்ந்த மனைவியின் களவொழுக்கம்
கணவன் மனதிலே ஆறாத காயமான திருமண பந்தம்

பல்கிப் பெருக உயிர்களுக்கு இறைவன்
அளித்த கொடை காமம், காமம் பாவமல்ல
கணவனைக் பிரிந்து வாடிய காமம்
நண்பனை வடிகாலாய்த் தேடிய பலவீன சுபாவம்


தேவரையும், முனிவரையும் வருத்திய காமம்
தேவதையாய் கிடைத்த மனைவியின் தேவையை
புரியாத கணவன், விரகதாபத்தால் வாடியவளுக்கு
தன்னை விருந்தாக்கி விருந்தோம்பிய நண்பன்

மனதிற்கும், உடலிற்கும் ஓயாத போராட்டம்
அறிமறிந்தும், காமசுகமோ தெவிட்டாத பேரின்பம்
பஞ்சும், நெருப்பும் அருகிருக்க பற்றிய காமத்தீ
இல்லற தர்மத்தை மறந்து யாத்த காமவேள்வி

அணைக்க, அணைக்க வளர்ந்த இன்பத் தீ
அழகனோ நொருக்குத் தீனி, அருந்தி,
அருந்தி அமுதை-அழகிடம் சுவைத்த தேனீ
மலரைச் சுற்றி வந்த காமத்தேனீ



புரிதலின்றித் தடம் புரண்ட இல்லறம்
பெற்றோர் பிரிந்திட- பிள்ளைகளுக்கு அன்போ
கிட்டாத வரம், இல்லறமோ இருபாலும்
நூற்கும் அரிய தவம், புரிந்தும் புரியாத மனிதம்



யாத்த இன்ப வேள்வி கேள்வியாக- நெஞ்சில்
நெருப்பள்ளிக் கொட்டிய அன்பு மனைவி
கணவன் வாழ்வோ ஈரவிழிக்காவியம்- மணமேடை
அமர்ந்த மங்கை வாழ்வில் புது அத்தியாயம்

காதல் கசப்பாக, உறவு பிரிவாக,
விவாகம் இரத்தானது, அவளுக்கோ புதுவாழ்வு
புதுவசந்தம், ஏமாந்த கணவனுக்கோ எரிநரகம்
இதயத்தில் ஏழ்கடலின் சோகம், மனதில் முகாரி ராகம்

அறம் பிறழ்ந்த இல்லறம், நல்லறம் துறந்த
மனையாள், காமம் ஆளும் உலகில்-அன்புக்
கணவனை மறந்து காமக்கிழத்தியான இல்லாள்

இன்பத்திலும், துன்பத்திலும், நோயிலும், நலத்திலும்
ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வோம்
இறை சந்நிதியில் அளித்த வாக்கு நீரில் எழுதிய எழுத்தானது
அன்புக் கணவன் நெஞ்சம் நொருங்கி நடுங்கி விம்மியது



விவாகம் இரத்தாக, தந்தையோடு ஆண் குழந்தை,
மங்கையோடு இரு பெண் குழந்தைகள்,
இருவர் வாழ்வும் வேறாக, கணவன்
மனைவி உறவு கயிறறுந்த பட்டமானது

ஒளிமயமான வாழ்வில் இருள் நிலைத்தது
ஒருவனுக்கு ஒருத்தி விதி வகுத்த மணவாழ்வோ
சுருதி பிசகிய ராகமானது, தந்தி அறுந்த வீணையாய்,
பூளிச்சிற்பமாய் மாறிய ஆண் இதயம் ரணமானது

ஏதுமில்லாதவள் வாழ்வில் யாதுமாகி நின்றவன்
மனம் புண்பட, போதும் உன் உறவென்றாள்
மணமாலை மாற்றி புதுவாழ்வு வாழ- என்னில்
மாறாத அழகும் இளமையும் உண்டென்றாள்-

மனைவி அமைவதெல்லாம்-இறைவன்
கொடுத்த வரம் சாபமானது- இறைவா உன்
சந்நிதியில் என் நிம்மதி- நீதானே என் கதி,
பாடும் பாடலானது- காதல் மணல் வீடானது



பூசிய மஞ்சளும், சூடிய குங்குமமும்,
மலர்களும் ஒரு மாலைக்குள் வாடிட
அறுத்துக் கட்டும் கயிறாய் மாங்கல்யம்
அன்பில் நிலைத்த உறவாய் தாம்பத்தியம்?



கற்பு, மானம் இன்று பொருளிழந்துபோனது
பெண்மை மலிவாய் விலை போகுது
மூடி மறைத்த பெண்மை ஆடை அவிழ்த்திட
பெண்ணோ விபச்சாரி- ஆணியக் கலாச்சார நியதி

வள்ளுவன் வகுத்த இல்லறம் புனிதமானது
காமம் ஆட்டுவிக்கும் மனமோ பேயானாது, மலருக்கு,
மலர் தாவும் வண்டுக்கு வாழ்வு கேலிக்கையானது
பிறன்மனை நோக்காத ரோாண்மையோ வேள்வியானது

எல்லாம் மாறிடும் உலகில் உண்மை,
அன்பு, கற்பு பொருள் இழந்திட கணவன் மனைவி
உறவு நாறிட- புனிதமிழந்த வாழ்வு போராட்டமானது
ஒருவனுக்கு ஒருத்தி வேள்வியானது

புது வசந்தம்



வாழ்வில் மீண்டும் வசந்தம்-மீண்டும்
வாழ்வோம் என்று இணைந்த பந்தம்
மங்கலம் பொங்க, பிள்ளைகள் வாழ்த்த
மணமாலை சூடிய புதுவாழ்வு
ஒரு புதிய உதயம்

இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக
விந்தையானது, காலம் மாறிட, உலகம் மாறிட
அன்பே இணைக்கும், வெறுப்போ பிரிக்கும்
என்றும் நிஜமானது, மணவாழ்வு தேன் கூடானது

இளமையில் மணந்து இடையில் அறுந்த பந்தம்
புதிதாய்த் தொடங்கிய மணவாழ்வு,
முதுமையிலும் இனிக்க, இருவர் உள்ளங்களிலும்
புது வசந்தம்,இருமனம் இணைந்த வாழ்வோ நறுமணம்



இருமனம் மீண்டும் இணைந்திடப் பிறந்த நறுமணம்,
இருவர் வாழ்விலும் பூத்த புது வசந்தம்-
இணைபிரியாத அன்றில்களாய் புது வாழ்வு
பரிமளமான இன்ப உறவு

மாங்கல்யம் சூடிய மணவாழ்வில், மஞ்சளும்
குங்குமமும், செங்கனிவாயில் புன்னகையும்
காலமெல்லாம் மங்கலம் பாட, பரஸ்பர அன்பு,
நம்பிக்கை, புரிந்துணர்வு செழித்திட
புது வசந்தமாய் மலர்ந்த வாழ்வு

இல்லறமோ இருபால் மனங்கள்
புரிதலோடும், அன்போடும் தம்மை ஆகுதியாக்கி,
வாழ்நாள் முழுதும் யாக்கும் அரிய யக்ஞம்
தவமான வாழ்வில் வரமான இன்பம் சௌபாக்கியம்



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-13-11-2024

வண்ணக் கனவு





என் கண்களுக்கு நீ தந்த வண்ணக் கனவு
ஓவியமானதடி, என் நெஞ்சைக் கவர்ந்த உன்தன்
காந்தப் புலம் காதலானதடி, காதலான
இதயம் எழுதும் காதல் காவியமானதடி

சுரிகுழல், சுந்தர மதிமுகம், கயல்விழி,
கொவ்வைச் செவ்வாய், அன்ன நடை, சின்ன
இடை, ஆனிப்பொன்மேனியில் பரிமளம்
பூவை மனமெல்லாம் காதலின் சுகந்தம்



பொன்மேனி சிவக்க, நாணித்தான்
நங்கை சொன்ன காதல்-கல்லில்
எழுத்தாய் நெஞ்சில் நிலைக்க
காவியமான வாழ்வு

கண்ணுக்குத் தேன்மலராகி
என் காதல் வானுக்கு பௌர்ணமி நிலவாகி
காதல் கவிபாடும் கானக்குயிலாகி
நெஞ்சுக்குள் ஆடிய கலாபமயிலாய் இவள்



நாணிய கோலத்தில் மிதிலையின் மைதிலி
நகை தவழும் முகத்தில் காவிரி மாதவி,
கோலமயிலின் சாயலில் சாகுந்தலை, எனை
ஆட்கொண்ட பாவத்தில் சூடிக்கொடுத்த கோதை





காதல் சொல்லும் அழகில் ராதை, கவிதை சொல்ல
கம்பனுக்குச் சீதை, மாசறு பொன்னே, வலம்புரி முத்தே எனப்
போற்றக் கண்ணகி, பாடி என்னை ஆட்கொண்ட அழகில்
பாரிஜாதப் பூவோ, வண்ணப் பைங்கிளியோ அனார்க்கலி

கண் மூடித் துயில் கொண்டாலும்
கனவிலும் என்னை வருத்தும் மோகனம்
கவி பாடி மனம் களிக்க காதலோ காவியம்
கன்னியோ இதயம் எழுதிய மன்மத ஓவியம்

விழிகளில் நாணம், கனிமொழிகளில்
ஆனந்த கீதம், என்னை ஆட்கொண்ட மனதில்
காதலின் ஆலாபனம்- இதயச் சங்கமத்தில்
காதலின் தெவிட்டாத மோகனம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே-Pax Ravichandra-22-11-2024